# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2025

**வகுப்பு : 12**

# பொதுத் தமிழ்

நேரம் : 3 மணி. மதிப்பெண் : 90

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

2. அணி இலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்-----
அ) முத்து வீரியம் ஆ) தொல்காப்பியம் இ) தண்டியலங்காரம் ஈ) வீர சோழியம்

3. கடலின் பெரியது-----
அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் செய்த உதவி
இ) தினை அளவு செய்த உதவி ஈ) பனையளவு செய்த உதவி

4. மயிலை சீனி. வெங்கடசாமி எழுதிய சொல் ஆய்வு கட்டுரைகளின் தொகுப்பு-----
அ) மத்த விலாசம் ஆ) தமிழ்நாட்டு வரலாறு இ) அஞ்சிறைத் தும்பி ஈ) திசை எட்டும்

5. பூஜ்யங்களின் சங்கிலி என்ற நூலை எழுதியவர்-----
அ) கவிமணி ஆ) பூமணி இ) பரலி சு. நெல்லையப்பர் ஈ) சிற்பி பாலசுப்பிரமணியன்

6. உயர்ந்தோர் - இச்சொல்லுக்கான இலக்கணக் குறிப்பைத் தேர்க
அ) பண்புத் தொகை ஆ) வினையாலணையும் பெயர் இ) வினைத் தொகை ஈ) தொழிற்பெயர்ச்சொல்

7. தமிழில் திணைப் பாகுபாடு ----- அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது
அ) பொருட் குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர் குறிப்பு ஈ) எடுத்துக் குறிப்பு

8. சென்னை வெறும் நகர மட்டுமன்று, அது நம்பிக்கை மையம் -காரணம்
அ) நேரடி மறைமுக வேலை வாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள் வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ அனைத்தும்

9. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருள் அறிந்து பொருத்துக.

| | |
|---|---|
| அ) பாலை பாடினான். | 1) தேரை என்னும் உயிரினத்தைப் பாடினான் |
| ஆ) பாலைப் பாடினான். | 2) தேரினைப் பாடினான் |
| இ) தேரை பார்த்தான். | 3) பாலினைப் பாடினான் |
| ஈ) தேரைப் பார்த்தான். | 4) பாலைத் திணை பாடினான் |

அ) 4, 1, 3, 2. ஆ) 2, 3, 1, 4. இ) 4, 3, 1, 2. ஈ) 2, 4, 1, 3

10. "குடும்பம்" என்னும் சொல் முதன் முதலில் இடம் பெற்றுள்ள நூல்-----
அ) தொல்காப்பியம் இ) திருக்குறள் இ) குறுந்தொகை ஈ) புறநானூறு

11. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே- ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது -----. அ) தனிக் குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை
இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தை வழிச் சமூக முறை

12. "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் "என்று குறிப்பிட்ட நூல்-----
அ) நற்றிணை ஆ) அகநானூறு இ) குறுந்தொகை ஈ) கலித்தொகை

13. "விருந்தினர் இல்லம்" என்னும் கவிதையை தமிழில் தந்தவர்-----
அ) ஜலாலுத்தீன் ரூமி ஆ) என். சத்தியமூர்த்தி இ) ஜி. யு .போப் ஈ) கால்டுவெல்

14. "உரிமைத் தாகம்" என்னும் சிறுகதை எழுதியவர்-----
அ) பிரபஞ்சன் ஆ) பூமணி இ) புதுமைப்பித்தன் ஈ) வைரமுத்து

பகுதி II.

பிரிவு -1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×2=6

15. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது விளக்கம் தருக .
16. விடியல்,வனப்பு இரு சொற்களையும் ஒருங்கே அமைத்து ஒரு தொடர் எழுதுக.
17. மறக்கக்கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?
18. எதிர்பாராத நிகழ்வுகளாக ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

பிரிவு- 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×2=4

19. "தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்"- குறிப்பு வரைக
20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21. புக்கில், தன்மனை சிறுகுறிப்பு எழுதுக.

பிரிவு-3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14

22. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம்- இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்க.
23. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.தாமரை இலை நீர் போல, எலியும் பூனையும் போல
24. கலைச் சொல்லாக்கம் தருக. ARCHIVE, CULTURE
25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. கலை, களை, கழை
26. கீழ்க்காணும் சொல்லுருபைப் பிரித்தும் சேர்த்தும் இரு வேறு தொடர்களை அமைக்க : விட்டான்

27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. (அ) தந்தனன், (ஆ) கலங்கி
28. ஏதேனும் ஒன்றுக்குப் புணர்ச்சி விதி தருக. (அ)செந்தமிழே, (ஆ) இனநிரை
29. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக. (வானம், பற, நிலவு, தொடு)
30. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிக்க.
(அ) கவிஞர் -ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம்
(ஆ) தாய்மொழி - வீட்டில் எழுத்துகள் வெளிச்சம் தரும்.
(சூடாமணி, தமிழ் ஒளி , கவிமணி, மறைமலை அடிகள்)

பகுதி - III. பிரிவு -1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

31. "ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
32. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
33. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.
34. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.

பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

35. மயிலை சீனி வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் பற்றி விளக்குக.
36. சென்னை "அறிவின் நகரம்" என்பதைச் சான்றுகளுடன் விளக்குக.
37. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
38. மணந்தகம் - விளக்குக.

பிரிவு -3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×4=12

39. (அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. (அல்லது)
(ஆ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

முச்சங்கம் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள் கூட்டி
சொற் சங்கமாகச்
சுவை மிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி - கண்ணதாசன்

41. (அ)வாகைத் திணையைச் சான்று தந்து விளக்குக. (அல்லது)
(ஆ)கூதிர்ப் பாசறை - இத்துறையைச் சான்றுடன் விளக்குக.

42. (அ)தட்டச்சர் பணி வேண்டி பாரதியார் பதிப்பகத்தார்க்கு விண்ணப்பம் வரைக. (அல்லது)
(ஆ) பொருத்தமான வேற்றுமை உருபுகளை சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
1. மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்
2. போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.
3. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும் 4. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வில் உயரலாம்

43. தமிழாக்கம் தருக.
(1) Learning is a treasure that will follow its owner everywhere. (2) A new language is a new life.
(3) If you want people to understand you, speak their language (4) The limits of my language are the limits of my world

செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா. கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.

மொழி என்பது மக்கள் படைத்து காக்கும் அரியதொரு கலை. முடியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி. குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மன வளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியாகும்.மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராக உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே மொழியால் வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்ப்பவரும் மக்களே.

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44. (அ)தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறவனவற்றைத் தொகுத்து எழுதுக. (அல்லது)
(ஆ) செய்ந்நன்றி அறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45. (அ) நீங்கள் வியந்து பார்த்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.(அல்லது)
(ஆ) 'குடும்பம்' என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது எவ்வாறு? விளக்குக.

46. (அ)பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்கவும். (அல்லது)
(ஆ) புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அருந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரி செய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.

பகுதி -V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6
(அ) மாமேயல் .... எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடலை அடி பிறழாமல் எழுதுக.
(ஆ) அது - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.